# ரஷ்யா

## 1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து





எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரஷியாவில் பரிசுத்த ஆவி விழுந்த போது, ரஷியா மாத்திரம் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தை அன்று ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைக்கு அவர்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்க மாட்டார்கள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

45. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரஷியாவில் பரிசுத்த ஆவி விழுந்த போது, ரஷியா மாத்திரம் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தை அன்று ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைக்கு அவர்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்க மாட்டார்கள். எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரஷியாவில் மகத்தான எழுப்புதல் உண்டானது. தேவன் அவர்கள் மத்தியில் வந்து, சைபீரியா போன்ற இடங்களில் மகத்தான எழுப்புதல் உண்டானது. அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் அதை புறக்கணித்தனர். இன்றைக்கு அந்த தேசம் போய் விட்டது. அரசு அனுமதியின் பேரில் மாத்திரமே அவர்கள் சபைகளை வைத்திருக்க

லாம். அவர்கள் நியாயத்தீர்ப்பில் தண்டிக் கப்படுவார்கள், அவர்கள் கம்யூனிஸம் என்னும் கொடிய கோபாவேசத்திற்குள் வழிதப்பி சென்று, தங்களை பிசாசுக்கு விற்றுப் போட்டனர்.

46. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பரிசுத்த ஆவி இங்கிலாந்தில் விழுந்தது. விசுவாசத்தின் மகத்தான வீரர்களான ஜார்ஜ் ஜெஃப்ரீஸ், எஃப். எஃப். பாஸ்வர்த், சார்லஸ் பிரைஸ், ஸ்மித் விக்கில்ஸ்வர்த் போன்றவர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எழும்பி, இங்கிலாந்துக்கு பரிசுத்த ஆவி யின் எழுப்புதலை அளித்தனர். ஆனால் அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் அவர்களைக் கேலி செய்து, சிறையி லடைத்து, பைத்தியக்காரர்கள் என்ற ழைத்து, அவர்களுக்கு மூளை கோளாறு ஏற்பட்டு விட்டதாகக் கருதினர். ஜனங்கள் அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்

பதற்கு செல்ல, சபைகள் அனுமதியளிக்க மறுத்து விட்டன. இவர்கள் பிணியாளி களை சுகப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தி, மகத்தான கிரியைகளைச் செய்தனர். இங்கிலாந்து ஒரு தேசமாக சுவிஷேத் தைப் புறக்கணித்த காரணத்தால், அவளுடைய பாவங்கள் உலகம் முழுவதிலும் அறியப் பட்டுள்ளன. உலகத்தில் இங்கிலாந்தைப் போல் ஒரு மார்க்கம் தப்பின தேசம் (apostate nation) வேறெங்கும்மில்லை எனலாம் - ரோமாபுரியும் பிரான்சும் உட்பட இங்கிலாந்திற்கு மேலாக அவள் மார்க்கம் தப்பினவர்களுக்குத் தாய். ஃபின்னி போன்ற மகத்தானவர்கள் பிரசங் கித்த அந்த இடத்தில் ஹேமார்க்கெட், சார்லஸ் ஜீ. ஃபின்னி, வெஸ்லி போன்ற வர்கள் - அவளோ அதை புறக்கணித்து விட்டாள்.

47. சென்ற வாரம், அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்பு நாம் செய்தித்தாள் களில் பார்த்தோம். அவர்களுடைய பெரிய மனிதர்கள் கொண்டிருந்த பாலுணர்ச்சி பலவீனத்தின் காரணத் தால், ஒற்றர்கள் உள்ளே புகுந்தனர். அவர்களுடைய தலை வர் இன்னும் அநேகரைக் கண்டுபிடித்தார். பத்திரிக்கைகள் அந்த செய்தியை வெளி யிட்டன. அவர்களுடைய அரசில் காணப் பட்ட அவதூறின் பாவம் அவர்களுடைய மானக்கேடான பெயரை உலகம் பூராவும் அறிவித்தது. ஏன்? அவள் சத்தியத்தைப் புறக்கணித்தாள். அவளுக்கு கூற சாக்கு போக்கு உண்டாயிருந்தது. அவள் முடிந்து விட்டாள். நீண்ட காலம் முன்பே இங்கி லாந்து தேவனற்ற நாடாகி விட்டது.

48. பெந்தெகொஸ்தேவிலிருந்து தொடர்ச்சியாக வந்த அந்த மகத்தான சுகமளிக்கும் எழுப்புதல் பதினைந்து

ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் தொடங்கின போது - தலைநகரான வாஷிங்டன் டீ.சி.யில் எழுப்புதல் உண்டா னது .... ஜனாதி பதிகளும், உபஜனாதி பதிகளும், பிரமுகர்களும், ஆளுநர்களும்; பெரிய காரியங்கள் நிகழ்ந்தன.... ஆளுநர் கள், பெரிய மனிதர்கள் சுகம் பெற்றனர். அறுபத்தாறு ஆண்டுகளாக சப்பாணியா யிருந்த காங்கிரஸ்காரர் உப்ஷா சுகமடைந் தார். அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அது இல்லையென்று மறுக்க முடியாது. அவர்களுடைய முன்னிலையில் இது நடந்தது. ஆனால் அவர்களோ அதைப் புறக்கணித்தனர்.

49. அதன் காரணமாகத் தான் இந்த தேசம். அவள் தண்டிக்கப் பட வேண்டிய வள், அவளுக்கு நம்பிக்கை எதுவுமில்லை. அவள் இரக்கத்துக்கும் நியாயத்தீர்ப்புக்கும் இடையேயுள்ள கோட்டை கடந்து

விட்டாள். அவள் தேசத்தை ஆளுகை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவள் முழுவதும் அழுகிப் போனவளாயிருக் கிறாள். அவளுடைய அரசியல் அழுகி விட்டது. இந்த தேசத்தின் ஒழுக்கம் என்னால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தாழ்ந்த நிலையை அடைந்துள் ளது. இங்குள்ள மத சம்பந்தமான முறைமைகள், ஒழுக்கத்தைக் காட்டிலும் அதிகம் அழுகியுள்ளது. அப்படி இருப் பதனால், இந்த தேசத்திலுள்ள சபைகள் அனைத்துமே சபைகளின் சங்கத்தில் சேர்ந்து கொண்டு, மிருகத்தின் முத்தி ரையை தரித்துக் கொண்டுள்ளன. என்னே ஒரு காரியம்! ஏன்? ''என் விருந்துக்கு வாருங்கள்'' என்று கிறிஸ்து அவர்க ளுக்குத் தருணம் அளித்தார் - பெந்தெ கொஸ்தே விருந்துக்கு. பெந்தெகொஸ்தே என்றால் ''ஐம்ப து.''

50. பரிசுத்த ஆவி ரஷியாவில் ஊற்றப் பட்ட போது, அவர்கள் பெந்தெகொஸ்தே விருந்துக்கு - ஆவிக்குரிய விருந்துக்கு - அழைக்கப்பட்டனர். அவர்களோ அதை நிராகரித்தனர். இங்கிலாந்தின் மீது பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது, அவர்கள் அதை நிராகரித்தனர். அவ்வாறே பரிசுத்த ஆவி அமெரிக்காவில் ஊற்றப்பட்ட போது, அவர்களும் அதை நிராகரித்தனர்.

51. அவர் மூன்று முறை அழைத்தார். அவர் மூன்று முறை அனுப்பினார். அவர்களோ விருந்துக்கு வரும்படி விடுக்கப்பட்ட அழைப்புக்கு செவி கொடுக்கவில்லை. அவர் மறுபடியும் அனுப்பி, ''இந்த ஜனங்களை கட்டாயப் படுத்தி அழைத்து வா'' என்றார். மேசையை ஆயத்தப்படுத்த வேண்டும். அது ஆயத்தமாயுள்ளது. இன்னும் இட முள்ளது. இன்னும் சில மாதங்களில்,

அல்லது ஓராண்டில், எதுவாயிருப்பினும், தேவன் வேறாரு அசைவை தேசம் முழுவதிலும் அனுப்புவாரென்று நான் நம்புகிறேன். ஏனெனில் முன்குறிக்கப்பட்ட வித்து எங்கோ உள்ளது. எங்கோ, உலகத் தின் ஏதோ ஒரு பாகத்தில், வெளிச்சம் விழவேண்டிய தாயுள்ளது. ஆனால் இந்த தேசமோ போய் விட்டது.

52. இந்த வாரம் லைஃப் பத்திரிக் கையை அன்றொரு நாள் நான் லிட்டில் ராக் என்னுமிடத்தில் - இல்லை, ஹாட் ஸ்பிரிங் என்னுமிடத்தில் - பார்த்துக் கொண்டிருந்தேன். அது நியூயார்க் மாகா ணத்தின் ஆளுநர் என்று நினைக்கிறேன். அவர் அரை நிர்வாணப் பெண் ஒருத்தி யுடன் ஹானலூலூவில் நடனமாடிக் கொண் டிருந்தார். அதற்கு கீழே வேறொரு பிரபல மானவர். ஓ, என்னே ஒரு அவமானம்! நம்முடைய தேசத்தை இன்று பாருங்கள்.

நமது தேசத்தின் நிலையைப் பாருங்கள். அவள் எங்கு அடைந்திருக்கிறாள் என்றும் அவள் எவ்வளவாக தாழ்ந்த நிலையை அடைந்திருக்கிறாள் என்றும் பாருங்கள்.

53. இன்றுள்ள நமது மதசம்பந்தமான முறைமைகளைப் பாருங்கள். தற்போதைய நிலையை அவர்கள் எப்படி அடைய முடிந்தது? அவர்கள் தேவனுடைய செய்தியை - விருந்துக்கு வரும் படி அவர் விடுத்த அழைப்பை - புறக்கணித்த காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாயுள்ளதாக நீங்கள் கூற முடியுமா? தங்கள் ஜனங்களைப் புகை பிடிக்கவும், மற்றும் பல காரியங்களைச் செய்யவும் அனுமதிக்கும் அப்படிப்பட்ட வாழ்க்கை.

**தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுமளவிற்கு விஞ்ஞானமானது தேவனுடைய மகத்தான ஆய்வுக் கூடத்திற்குள்ளே அத்துமீறி நுழைந்துவிட்டது. ஞானமானது தன்னையே அழித்துக் கொள்ளட்டும் என்று தேவன் விட்டு விடுகின்றார். தேவன் எதையும் அழிக்கவில்லை.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-01-24 பிரசவ வேதனை

30. புதிய வானத்தையும், புதிய பூமியையும் நாம் பெற்றுக் கொள்வோம் என்று தேவனுடைய தீர்க்கதரிசிகள் நமக்கு கூறியிருக்கின்றார்கள். அந்த வசனமானது வெளிப்படுத்தின விசேஷத்தில் 21-ம் அதிகாரத்தில் காணப்படுகின்றது.

''பின்பு, நாம் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்திய பூமியும் ஒழிந்து போயின;'' சமுத்திரமும் இல்லாமற் போயிற்று.

ஒரு புதிய பூமியை நாம் பெற்றுக் கொள்வோமானால், பழைய பூமியானது ஒழிந்து போக வேண்டும். ஏனெனில் புதிய பூமியும் பழைய பூமியும் ஒருமிக்க நிலைத்திருக்க முடியாது - அல்லது புதிய

உலகமும் பழைய உலகமும் ஒருமிக்க ஒரே சமயத்தில் நிலைத்திருக்க முடியாது. ஆகவே புதிய பூமியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக பழைய பூமியானது மரிக்க வேண்டுவதாயிருக்கின்றது. இப்பொழுது கவனியுங்கள். பழையது மரிக்க வேண்டுமானால், அது புதியதை பிறப்பிக்கத்தக்கதாக இப்பொழுது பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்.

31. இங்கு இரண்டு மூன்று மருத்துவர் கள் இருக்கிறீர்கள் என்று நானறிந்திருக் கிறேன், உங்களுடைய சமூகத்திற்கு முன் பாக இப்பிரசவ வேதனைக்குரிய காரியங் களை நான் இப்பொழுது பேசிக் கொண் டிருக்கிறேன். ஒரு மருத்துவர், பிரசவ வேதனையிலிருக்கும் ஒரு பெண்ணை பரிசோதிக்கும் போது, அவர் செய்யும் முதலாவது காரியம் அப்பெண்ணிடம்

ஏற்படும் பிரசவ வேதனையின் நேரங் களை கவனிப்பதேயாகும். மருத்துவர் அவள் எப்பொழுது வேதனைகளைப் பெறுகிறாள் என்று நேரத்தைப் பார்த்து அதைக் குறித்துக் கொள்கிறார். மேலும் ஒவ்வொரு வேதனையின் இடைவெளி எவ்வளவு என்றும், ஒன்றிற்கும் மற்றொன் றிற்குமுள்ள வேதனையின் உக்கிரமம் எவ்வளவு என்பதையும் மருத்துவர் கவ னிக்கிறார். ஒரு வேதனை மற்றொன்றைக் காட்டிலும் கடுமையாகக் காணப்பட்டு இவ்விதமாக வேதனையானது நெருக்க மாக அதிக உக்கிரத்துடன் ஒட்டுமொத்த மாக பெருகிக் கொண்டே வருகிறது. இவ்வாறு தான் மருத்தவர் சோதித்தறித்து பிரசவ நேரத்தைக் குறிக்கிறார்.

இப்பொழுதிருக்கும் உலகமானது ஒரு புதிய உலகத்தைப் பிறப்பிக்க வேண்டுமா னால், நாம் இவ்வுலகத்தின் மேல்

அடைந்துக் கொண்டிருக்கும் சில பிரசவ வேதனைகளைக் குறித்து இப்பொழுது ஆராய்வோம். அவ்விதம் நாம் ஆராயும் போது, அவள் என்ன நாளில் அல்லது எவ்வளவு தூரம் தன்னுடைய பிரசவ வேதனையில் காணப்படுகிறாள் என்பதை நாம் நிதானிக்கலாம்.

32. முதல் உலக மகா யுத்தமானது மகத்தான பிரசவ வேதனையை நமக்குக் காட்டிற்று. அவள் தன்னுடைய முதலாவது பிரசவ வேதனைக்குள் சென்று கொண் டிருக்கிறாள் என்பதை அது காண்பித்தது. ஏனெனில் அந்த சமயத்தில் அவளுக் கென்று குண்டுகளும், இயந்திரத் துப்பாக்கி களும், விஷ வாயுவும் கொண்டுவரப் பட்டன. உங்களில் அநேகருக்கு ஞாபகம் இருக்கும் என நான் நினைக்கிறேன். நான் அப்பொழுது 8 வயது சிறுவனாக இருந்தேன். மஞ்சள் நிறமுள்ள இந்த

க்ளோரின் விஷ வாயுவைக் குறித்து ஜனங்கள் பேசிக் கொண்டதை நான் ஞாபகம் கொள்ளுகிறேன் - அது எப்படி யிருந்தது என்றும், இந்த முழு உலகத்தை யும் அது எரித்து விடப்போகிறது என்றும் அவர்கள் கூறினார்கள். அது உடைந்து சிதறும் காரியமானது, பூமியின் மேல் புயல் வீசுவதை போன்றிருக்கும் என்று யூகிக்கி றேன். ஏனெனில் அந்த விஷ வாயுவான மகத்தான ஆயுதத்தின் காரணமாக எல்லோ ரும் மரணத்திற்கு அஞ்சி நடுங்கினர். இந்த பூமியானது முதலாம் வேதனையினூடாக கடந்து சென்றது.

இரண்டாவது உலக மகா யுதத்தத்தை யும் நான் பெற்றுக் கொண்டோம் என்று காண்கிறோம். இந்த பூமியானவளின் பிரசவ வேதனையானது மிகவும் மகத்தா னதாக எல்லா சமயங்களிலும் காணப் பட்டது. அணுகுண்டை அந்த சமயத்தில்

வெடிக்கச் செய்ததினால் அவள் பெரும் பாலும் இழந்து போனவளாகக் காணப்பட் டாள். ஏனெனில் அந்த அணுகுண்டானது ஒரு முழு பட்டணத்தையே அழிக்கக் கூடியதாயிருந்தது. பூமியின் மேல் சொரிந்த முதலாவது உலக ஆயுதத்தின் அழிவின் வேதனையைக் காட்டிலும் இரண்டாம் உலக யுத்தத்தின் வேதனை யானது மிகவும் உக்கிரமாகக் காணப் பட்டது.

33. இப்பொழுதோ, பிள்ளை பேரானது சமீபித்துவிட்டது என்று அவள் அறிந்தவ ளாயிருக்கின்றாள். முழு உலகத்தையும் அழித்து விடக்கூடிய ஹைடிரோஜன் குண்டுகளும், கண்டம் விட்டு கண்டம் பறக்கும் ஏவுகணைகளும் இப்பொழுது உண்டு என்று அறிந்தக் காரணத்தினால் அவள் மிகவும் பயத்தோடும் பதைபதைப் போடும் காணப்படுகின்றாள். ஒருநாடு,

அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும், மற்றொரு நாட்டை அது பயப்படுத்துகிற தாயிருக்கிறது. ஏனெனில் அந்த பறக்கும் ஏவுகணைகளை விரும்பிய இடத்தில் போட்டு, தங்களால் அழிவையுண்டாக்க முடியும் என்று அவர்கள் கொக்கரிக்கின் றார்கள்.

ரஷியா தேசமானது, நம்முடைய தேசத்தை அழித்துவிட முடியும் என்றும், அணுகுண்டுகளால் தன்னுடைய தேசம் உடைவதை தவிர்த்து விடமுடியும் என்றும் திருப்தியோடு அறிக்கையிடுகிறதென்று அன்றொரு நாள் ஒரு செய்தியின் வாயிலாக நான் அறிந்தேன். அதைக் குறித்து நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது தெரியவில்லை. ஒவ்வொருவரும் இத்தகையதோர் திருப்திக் கொண்டிருக் கின்றனர்.

தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுமளவிற்கு விஞ்ஞானமானது தேவனுடைய மகத்தான ஆய்வுக் கூடத்திற் குள்ளே அத்துமீறி நுழைந்துவிட்டது. ஞானமானது தன்னையே அழித்துக் கொள்ளட்டும் என்று தேவன் விட்டு விடு கின்றார். தேவன் எதையும் அழிக்க வில்லை. ஆதியிலே மனிதன் தேவனு டைய வார்த்தைக்குப் பதிலாக சாத்தா னுடைய ஞானத்தை ஏற்று தன்னை அழித்துக் கொண்டது போல இப்பொ ழுதும் அவ்வாறே அவன் முடிவடை கிறான்.

இப்பொழுது, அவள் கடந்து சென்றாக வேண்டும் என்பதை அவள் அறிந்திருக் கிறாள். அவளால் இன்னுமாக அதற்கு தாக்கு பிடிக்க முடியாது.

34. ரஷியா தன்னைக் காப்பாற்றிக் கொண்டு இந்த நம்முடைய தேசத்தை இன்றே அழித்துவிட நினைத்தால் அவ்விதம் அவளால் செய்யக்கூடும் என்று நான் நம்புகிறேன். எந்தவொரு சிறு நாடும் அவ்விதம் செய்யக் கூடும். ஆனால் அவ்விதம் அவர்கள் செய்ய பயப்படு வதன் காரணம் இந்த உலகம் அத்தகைய சூழ் நிலையில் ஆகாய மண்டலத்தில் நிலைத்து நின்று அதை தாங்கிக்கொள்ள முடியாது என்பதுதான். ஆகவே, இவ்வுலக மானது, தான் கைவிடப்படத்தான் வேண்டும் என்பதை அறிந்திருகிறதினால் அதினுடைய பிரசவ வேதனையானது மிகவும் உக்கிரமாயிருக்கின்றது. ஒரு புதிய பிறப்பு மிகவும் சமீபத்திலிருக்கிறதை கவனியுங்கள்.

அதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கின்றேன். இவ்வுலகத்தை சகித்து நான் களைத்துவிட்டேன். மரணம், துன்பம் இன்னும் எல்லாவித தொந்திரவுகளும், குடிகொண்டிருக்கும் உலகமிது என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறீர்கள். நாம் ஒவ்வொருவரும் இதை விட்டுவிட நினைப்பதினால் நான் மகிழ்ச்சியுள்ளவனாயிருக்கிறேன்; அத்தகைய நேரம் சமீபத்திலிருக்கிறதை நான் அறியும் போது அதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். யோவானும் இதையே மனதில் கொண்டவராய், “ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' என்று கூறுகிறார்.

# ஏழு தரிசனங்கள்

கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக நிகழவிருக்கும் சம்பவங்களையும் சகோ. பிரன்ஹாம் தரிசனத்தில் கண்டு, அவைகளை அவர் வெளிப்படையாய் உரைத்திருக்கிறார். இவைகளில் மிக முக்கியமாக கருதப்படுபவை பின்வரும் ஏழு சம்பவங்களாம்.

*தலைப்பு:* **இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி**

---

அவருடைய தனிப்பட்ட ஊழியத்தின் தொடர்பாக அவர் தரிசனங்களை கண்டு, அவை நிறைவேறின என்பது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக நிகழவிருக்கும் சம்பவங்களையும் அவர் தரிசனத்தில் கண்டு, அவைகளை அவர் வெளிப்படையாய் உரைத்திருக்கிறார். இவைகளில் மிக முக்கியமாக கருதப்படு பவை பின்வரும் ஏழு சம்பவங்களாம்.

1933ம் ஆண்டு ஜூன் மாதம் அவர் பழைய மேசன்களின் பழைய கூடத்தில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய வருகைக்கு முன்பு நிகழவிருக்கும் ஏழு முக்கியமான சம்பவங்களை அவர் தரிசனமாகக் கண்டார்.

ஜூன் மாதம் ஒரு நாள் காலையில் அவர் ஞாயிறு பள்ளி வகுப்புக்கு போதிப்பதற்கு முன்பு அவர் ஆவிக்குள்ளாயிருந்த போது, இந்த சம்பவங்கள் வரிசையாக தரிசனத்தில் காணப்பட்டன.

இத்தாலியா நாட்டின் சர்வாதிகாரி பெனிடோ முசோலினி எத்தியோப்பியாவின் மீது போர் தொடுப்பான் என்று அவர் தரிசனம் கண்டார்.




அப்பொழுது ஒரு சத்தம் அவரிடத்தில், "எத்தியோப்பியா அவனுடைய

(முசோலினியின்) கால்களில் விழும்" என்றுரைத்தது.

இருப்பினும், அந்த சத்தம் தொடர்ந்து, அந்த சர்வாதிகாரி பயங்கரமான முடிவை அடைவான் என்றும், அவனுடைய சொந்த ஜனங்கள் அவன் மேல் உமிழ்வார்கள் என்றும் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தது.




BOMBACCI
GELOMINI
MUSSOLINI PETACCI
PAVOLINI
STARACE



49. இதற்கடுத்து உண்டான தரிசனத்தில், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த அடோல்ஃப் ஹிட்லரை தலைமையாகக் கொண்ட ஜெர்மனியுடன் அமெரிக்கா போரில் ஈடுபடும் என்பதைக் காண்பித்தது.



அப்பொழுது எழுந்த சத்தம், இந்த பயங்கரமான போர் ஹிட்லரை மடங்கடித்து, அவனுக்கு மர்மமான முடிவு உண்டாகும் என்று முன்னுரைத்தது இந்த தரிசனத்தில், அவருக்கு 'லீக்ஃபிரிட் எல்லை' காண்பிக்கப்பட்டு, அங்கு அநேக அமெரிக்கர்கள் உயிரிழப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.



இந்த தரிசனத்துடன் தொடர்பு கொண்ட மற்றொரு தரிசனம், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜெர்மனியுடன் போர் தொடுப்பார் என்றும் அதன் விளைவாக

அவர் நான்காம் முறையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் முன்னுரைத்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தரிசனத்தின் மூன்றாம் பாகம், இவ்வுலகில் பாசீசம், நாசீசம், கம்யூனிஸம் என்னும் மூன்று கொள்கைகள் காணப்பட்ட போதிலும், முதல் இரண்டு கொள்கைகள் ஒன்றுமில்லாமல் போய், கம்யூனிஸம் மட்டும் தழைத்தோங்கும் என்பதைக் காண்பித்தது.



பாசீசமும் நாசீசமும் கம்யூனிஸத்தில் முடிவடையப் போவதால், இனி வரவிருக்கும் நிகழ்ச்சிகளின் காரணமாக, அவர் ருஷியாவின் மேல் கண்ணோட்டமாய் இருக்க வேண்டுமென்று அந்த சத்தம் அறிவுறுத்தியது.



அவருக்குண்டான நான்காம் தரிசனத்தில் யுத்தத்துக்குப் பின்பு தொழில்நுட்பத் துறையில் (technology) ஏற்படவிருக்கும் பிரம்மாண்டமான

முன்னேற்றங்களைக் குறித்து முன்னுரைக்கப்பட்டது.



அதற்கு அடையாளமாக, பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட கூரையைக் கொண்ட முட்டை வடிவமுள்ள ஒரு மோட்டார் வாகனம் யாரும் அதை ஓட்டாமலே தூரத்திலிருந்து முழுவதுமாக இயக்கப்பட்டு (remote control) அழகான நெடுஞ்சாலைகளின் வழியாய் போய்க் கொண்டிருந்தது.






அந்த வாகனத்துக்கு திருப்பும் சக்கரம் (Steering Wheel) இருக்கவில்லை. அந்த வாகனத்தில் சென்று கொண்டிருந்தவர்கள் 'செக்கர்ஸ்' (checkers) போன்ற ஏதோ ஒரு

விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது.





50. அவருக்குத் தோன்றின ஐந்தாம் காட்சி உலகத்தின் ஸ்திரீகளுடன் சம்பந்தப்பட்டதாயிருந்தது.








அந்த காட்சியில் ஸ்திரீகளின் நல்லொழுக்கம் வேகமாக சிதைந்து கொண்டு வருவது காண்பிக்கப்பட்டது.

அவள் தனக்களிக்கப்பட்ட வோட்டுரிமையின் மூலம் சுதந்தரம் என அழைக்கப்படுவதை பெற்று உலக விவகாரங்களில் பிரவேசிக்கத் தொடங்கின பிறகு, விரைவில் தன் உடலை அதிகமாக

வெளிப்படுத்தும் உடைகளை உடுத்த ஆரம்பித்தாள்.







அவள் தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டு ஆண்களின் உடைகளை

அணிந்து கொண்டாள். முடிவில் அந்த தரிசனத்தில் அவள் ஏறக்குறைய முழு நிர்வாணியாய், அத்தி இலை வடிவிலும் அளவிலும் உண்டாக்கப்பட்ட ஒரு மிகச் சிறிய துணியால் அவளை மறைத்துக் கொண்டிருந்தாள்.



அவளுடைய பெண்மை தரம் குறைவாக எண்ணப்பட்டு, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ளபடி மாம்சமான அனைத்தின் மேலும் பயங்கரமான ஒரு சிதைவு உண்டாகி, அதனுடன் கூட சீர்குலைதலும் உண்டானது.

அதன்பிறகு, சிறப்பாக உடுத்தியிருந்த மிகவும் அழகான ஒரு பெண் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோன்றினாள். மிகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டது.



அவளுடைய தோற்றம் மிகவும் அழகாக இருந்தபோதிலும், விவரிக்க இயலாத ஒரு கடினத் தன்மை அவளில் காணப்பட்டது. அழகுள்ள அவள், மிகக் கொடூரமும், பொல்லாப்பும், தந்திரமும் நிறைந்தவளாயிருந்தாள். அவள் தன் அதிகாரத்தை நாடெங்கிலும் பிரயோகித்து,

ஜனங்களின் மீது முழு ஆதிக்கம் செலுத்தினாள்.

இத்தகைய ஒரு பெண் எழும்புவாள்; அல்லது தரிசனத்தில் காண்பிக்கப்பட்ட இந்த பெண், வேதத்தில் ஸ்திரீயாக சித்தரிக்கப்பட்டுள்ள ஒரு ஸ்தாபனத்துக்கு அடையாளமாயிருக்கக் கூடும் என்பதை அந்த தரிசனம் உணர்த்தினது.

அவள் யாரென்பதை ஒரு சத்தம் உரைத்து வெளிப்படுத்தாமல் போனாலும், வேகமாக எழும்பி வரும் ரோமன் கத்தோலிக்க சபைக்கு இந்த ஸ்திரீ எடுத்துக்காட்டாய் இருக்கக் கூடும் என்று அவருடைய இருதயத்தில் தோன்றினது. அவர் எழுதி வைத்த இந்த தரிசனத்தின் முடிவில், இது ஒருக்கால் கத்தோலிக்க சபையாய் இருக்கலாம் என்னும் குறிப்பை எழுதியுள்ளார்.

51. இன்னும் ஒரு முறை பார்க்கும்படி அந்த சத்தம் அவருக்கு உத்தரவிட்டது.



அவர் திரும்பிப் பார்க்கையில் ஒரு பெரிய வெடி அமெரிக்க தேசம் முழுவதையும் பாழாக்கி, அழிந்து போன அந்த இடம் புகைக்காடாய் காணப்பட்டது. கண்கள் காணும் தூரம் வரைக்கும் அது குழிகளும் புகைந்து கொண்டிருக்கிற குப்பைகளும் நிறைந்து காணப்பட்டது. மனிதர் எவருமே காணப்படவில்லை.

அதன்பிறகு தரிசனம் மறைந்தது.



# ஏழு தரிசனங்கள்



# அந்த நோக்கத்திற்காகத்தான் ரஷ்யா வைக்கப்பட்டுள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-01-08 சுவற்றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்து

71. நான் ஆச்சரியப்படுகிறேன், இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறதான நம்முடைய நவீனங்கள், தெய்வீக சுகமளிக் கும் ஆராதனைகளை கேலி செய்து, சிரித்து, ஜீவிக்கிற தேவனுடைய சபை யைப் பார்த்து கேலி செய்து, சிரித்து, "இறுமாப்புள்ளவர்களாயும் தேவ பக்தி யின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்'' என்று வேதம் கூறுவது போல் செய்கின் றனர்.

72. நாம் மிகவும் பத்திரமாக இருக்கி றோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற இந்த நாளிலே, ரஷ்யா நம்மைவிட விஞ்ஞானத்திலே ஐந்து வருடம் முன்ன

தாக இருக்கிறதென்று சடுதியாய் கண்டுள்ளது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

73. நாம் அநேக விருந்துகளில் இருந்துள்ளோம். நாம் அதிகமாய் பாவத்திற்குள் பலவந்தமாய் போயுள்ளோம். சபையானது அவ்வளவு உறக்கத்தில் இருக்கிறது, இனி அது ஜெபக் கூட்டங்களைக் குறித்து கவலைப்படுவதில்லை. அவர்கள் அக்கறை அற்றவர்களாய் இருக்கிறார்கள். ஜீவிக்கிற தேவனுடைய உண்மையான ஆவிக்கு எதிராக ஒரு சத்தத்தை அவர்கள் எழுப்புகிறார்கள். அவர்கள் அதைப் பெறப் போவதில்லை .

அவர்கள் அவ்வளவாக தங்களை ஸ்தாபனமாக்கி, தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். ஜெபக் கூட்டங்களுக்கு வருவதற்கு அவர்களுக்கு நேரம் கிடையாது. அவர்கள் தொலைக் காட்சிகளிலும், சினிமா கொட்டகையிலும், ஊரைச் சுற்றிக் கொண்டும், மதுபான விருந்துகளுக்கும்,

மற்ற காரியங்களுக்கும் போகின்றனர். அது உண்மை .

74. ஒருக்கால் அது பண்டைய நாகரீகத்தைப் போலத் தோற்றமளிக்கலாம், ஆனால் இன்றைக்கு தேசத்துக்கு அதுவே தேவையாயிருக்கின்றது. ரப்பர் கையுறை கள் அணிந்து கொள்ளுதல்-அது போல சுவிஷேசத்தை சுற்றி மிக அதிக மிருதுத் தன்மை (sissying around) காணப்படுகிறது. பரிசுத்த ஆவியினால், வெறும் கரங்களால் அது கையாளப்பட வேண்டியுள்ளது. உண்மையாக!

75. ஓரிரு வாரங்களுக்கு முன்னர், பில்லி கிரஹாம் தன்னுடைய செய்தியில், "ரஷ்யா வாஞ்சிக்கும் எந்த நேரத்திலும், இந்த தேசமானது ரஷ்யாவுக்கு ஒரு ஒளி பரப்பும் சாதனமாக செயற்கைக்கோளாக (satellite) முடியும்" என்று சொன்னார். நாம் எங்கே இருக்கிறோம்?

76. நீங்கள் எல்விஸ் பிரெஸ்லியின் ரெக்கார்டுகளை வாங்கிக் கொண்டு, இந்நாட்களில் ஒன்றில், -'நாம் சுசியை நேசிக்கிறோம்'- என்ற அவனுடைய பாடல் இசையை கேட்பதற்காக, சபைக்கு போகாமல் வீட்டிலே தரித்திருப்பீர்கள்.!! நீங்கள் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப் பட்டீர்கள். என்ன சம்பவித்தது? அங்கே சுவற்றின் மீது ஒரு கையெழுத்து இருக்கின்றது.!

77. ரஷ்யர்கள் ஒரு 'ஸ்புட்னிக்' என்ற செயற்கைக்கோளை, பூமியிலிருந்து ஐநூறு மைல்களுக்கும் அப்பால் ஏவியுள்ளார்கள். அதின் எந்த ஒரு கருவியையும் நம்மால் கட்டுப்படுத்த இயலாது. அடுத்த முப்பது நிமிடங்களில் அதைப் போன்று ஆறு‘ஸ்புட்னிக்'களை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீது பறக்க விட்டு, "சரணாகதி அடையுங்கள், அல்லது சில வினாடிகளில் சாம்பலாகி விடுவீர்கள்'' என்று சொல்லக் கூடும். அவர்களால் அதைச் செய்ய

முடியும். அதைச் செய்ய முடியாமல் தடை செய்ய நம்மால் கூடாது. ஒரு இரத்த மில்லாத, இருதயமற்ற, தேவபக்தியற்ற கம்யூனிஸ்ட்கள் கரத்தில் அது இருக்கிறது. அதைத் தான் தேவன், பாவத்தை வெளிச் சத்திற்கு வருவதற்காக உபயோகிக்கிறார், நிச்சயமாக நீங்கள் வேதத்தை வாசிப்பீர்க ளானால், வெளிப்படுத்தின விசேஷத்தின் படியாய் ரஷ்யா அதை செய்ய வேண்டி உள்ளது. சரி, தீர்க்கதரிசன போதகர்களே ஒருக்கால் நீங்கள் கருத்து வித்தியாசப் படலாம். ஆனால், இவைகளெல்லாம் முடியுமட்டாய் காத்திருங்கள். அந்த நோக் கத்திற்காகத்தான் ரஷ்யா வைக்கப்பட்டுள் ளது. வேதம் அவ்விதமாய் கூறினது.

78. இப்பொழுது இங்கே அவள் ஒரு 'ஸ்புட்னிக்'கோடு நிற்கிறாள். அன்றொரு நாள் நாம் அதைப் போன்ற ஒன்றை அனுப்ப முயற்சித்தோம். அவர்கள் செய்த அளவிற்கே நம்மால் முடியும் என்று நாம் எண்ணினோம். பூமியை விட்டு மூன்றடி

கள் மேலெழும்பி, பின்னர் சிதைந்து விட்டது. அதிகப் படியான ராக்&ரோல் களும், பாவங்களும். நாம் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப்படுகிறோம். தேவனே! இரக்கமாயிரும்.

79. நாம் என்ன செய்யப் போகிறோம்? அவர்கள் இந்த 'ஸ்புட்னிக்'குள் ஏவுகணை களை வைத்தனுப்பி, "சரணாகதி அடையுங் கள், அல்லது ஐந்து நிமிடங்களுக்குள் ஒரு குவியலாக தூசியாகி விடுவீர்கள்'' என்று சொன்னால் என்ன சம்பவிக்கும்? நிச்சய மாக, நமது அரசாங்கம் உயிர் மீட்சிக்காக அடிபணியலாம். அவர்களால் செய்ய முடிகிற காரியம் அது மட்டுமே.

80. அப்பொழுது அமெரிக்கராகிய உங்களில் சிலருக்கு என்ன சம்பவிக்கும்? இங்கிருக்கிற நாம் அனைவரும். இவ் விடத்திலுள்ளவர்களல்ல, ஆனால் நான் தேசியமாகப் பேசுகிறேனா? தேசியமாகப் பேசுகிறேன்.

81. ரோஜா மொட்டு போன்று உதட்டில் சாயம் பூசிக் கொண்டு சமர்த்தாக செல்லும் பெண்களே! மூலையில் நின்றுகொண்டு, சுவிஷேசத்தைப் பிரசிங்கிக்கிறவர்களைப் பார்த்து கேலியாக சிரிக்கின்றீர்கள். இருபது வயதுக்குட்பட்ட இளமையானவர்களே! அடக்கி ஆள உண்டாயிருக்கின்ற அறிவைக் காட்டிலும் உங்களிடம் அதிக துணிவு இருக்கிறதென்று நினைக்கிறீர்கள்.

82. வீட்டில் தாயாரோடு உட்கார்ந்து கொண்டு தொலைகாட்சியை பார்த்துக் கொண்டிருக்கிற தகப்பனே! உனக்கு என்ன சம்பவிக்க போகின்றது? உன்னுடைய மகன் வேறே எங்கோ தேவையில்லாத இடத்தில் இருக்கிறான். சகோதரி எங் கேயோ உணவகத்தில் இருந்துகொண்டு ராக்&ரோல் ஆடிக் கொண்டிருக்கிறாள். நீயோ தொலைகாட்சியை பார்த்துக் கொண்டு சுவிசேஷத்தை பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய்.

83. சபை அங்கதினனே! உனக்கு என்ன சம்பவிக்க போகின்றது? உங்களுக்கு உண்டாகும் விளைவு என்னவாக இருக்க போகின்றது. எல்லா புத்தகத்திலும் அல்லது பட்டணத்திலுள்ள மிக பெரிதான சபை யிலும் உன் பெயர் இருக்கலாம். ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தின் பாதுகாப்பின் கீழ் நீ இல்லையென் றால், அழிந்து போகிறவர்களோடே நீங்களும் அழிந்து போவீர்கள், அங்கே உங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை.

84. என்ன சம்பவிக்க போகின்றது? அங்கு மேலாக ஒரு 'ஸ்புட்னிக்' விடப்பட்டிருக்கிறது. என்ன சம்பவிக்கும்? தேசம் சரணாகதி அடையும் நிச்சயமாக. அரசாங்கம் செய்ய கூடிய மரியாதையான ஒரே காரியம் அது ஒன்று தான்.

85. அப்பொழுது என்ன சம்பவிக்கும்? அலை அலையாய், கப்பல் கப்பலாய்

போர் சேவகர்கள் வருவார்கள். அலை அலையாய் விமானங்கள் வந்து இந்த தேசத்தில் இறங்கும். பெண்கள் வீதிகளில் அவமானப்படுத்தப்படுவார்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்? அது அவர்களுக்கு சொந்தமானது. உங்களை வீடுகளிலிருந்து உதைத்து தள்ளி, அதை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

86. வாலிப பெண்கேள! வாலிப ஆண் களே! அந்த நேரத்தில் இருக்கப்போகும் உங்களுக்கு என்ன சம்பவிக்கும்? பாவத் தின் கிரயம் செலுத்தப்பட்டாக வேண்டும். அது எந்த தேசமாயினும் கவலையில்லை அல்லது யாராயிருந்தாலும் சரி, அது அதை செய்யத் தான் போகிறது. தனிபட்ட முறையில் அல்லது ஒரு தேசமாக. அதற்கான கிரயத்தை செலுத்த தான் வேண்டும். காட்டு மிராண்டிதனமான, தேவ பக்தியற்ற, கிர்தா (whisker-jawed) வைத்த, கம்யுனிஸ்டு போர் சேவகர்கள்

உங்கள் மனைவிகளையும், உங்கள் வாலிப பெண்களையும் பிடித்து அவமானப்படுத்து வார்கள். அங்கே நின்று கொண்டு, நீங்கள் பார்க்கத்தான் முடியும். அதை குறித்து நீ ஒன்றும் செய்ய முடியாது.

87. இதற்கு காரணம் என்ன? நீங்கள் அப்படிப்பட்ட காரியங்களான தொலைக் காட்சி, ராக்&ரோல், பாவம் முதலானவை கள், ஏதோ குளிர்ந்துப் போன, இயற் கைக்கு மேம்பட்டதை வியாக்கியானிக்க முடியாத, சாதாரண பிரசங்கியார் சொல் லுகின்றவைகளுக்கு செவி கொடுத்ததி னால் தான். கையெழுத்தானது சுவற்றின் மேல் உள்ளது! அது சரியே! நாம் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப்பட்டோம்.

88. அது எப்பொழுது சம்பவிக்கும்? காலையில் பொழுது விடிவதற்கு முன்னர். யார் அதை தடை செய்ய முடியும்? முயற்சி செய்து பார். அப்படியாய் சம்பவிக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

89. ஆனால், நான் உங்களுக்கு சொல்லட்டும், ஜீவிக்கின்ற தேவனுடைய சபையை அது ஒரு போதும் தொடாது, அந்நேரத்தில் நாம் போய் விட்டிருப்போம்.

90. ஆகவே, நண்பர்களே! செவி கொடுங்கள். சுவற்றின் மீது நாம் கையெழுத்தை பார்க்கிறோம், அந்த காரியமானது அவ்வளவு நெருக்கத்தில் இருக்குமானால், இது சம்பவியாதபடி இப்பொழுது அதைத் தடை செய்ய ஒன்றினாலும் கூடாது.

91. அமெரிக்காவுக்கு பிரசங்கம் பண்ணப்பட்டாயிற்று, இயற்கைக்கு மேம் பட்டது செய்யப்பட்டாயிற்று, தொடர்ந்து அவர்கள் அதின் மேன்மையான காரியத் தினூடாக கடந்து வந்தார்கள்.

92. ஒரு நாட்டிற்குப் போய் ஒரு எழுப்புதல் நடத்தி, வாரத்திற்கு 40 பேர் மனமாறினால், 6 வாரங்கள் கழித்து அங்கே போனால் 4 பேர் கூட அங்கு இல்லை. அந்த பழைய குளமானது வலை

போட்டு எல்லாம் எடுக்கப்பட்டாயிற்று. தேவன் அனேகம் பேரை தெரிந்தெடுத்தார், கடைசி நபர் உள்ளே வந்தவுடன் கதவு மூடப்பட்டு, அது முடிந்து விடும்.

93. இரக்கத்தை வேண்டாம் என்று தள்ளின பின்பு, அங்கே நியாயத்தீர்ப்பை தவிர வேறொன்றும் இல்லை. இதோ, நாம் இங்கே பாதையின் முடிவில் இருக்கி றோம். இயற்கைக்கு மேம்பட்டது செய்யப் பட்டாயிற்று, அது பரிகாசம் செய்யப்பட்டு நகைப்பிற்குள்ளாக்கப்பட்டது. கடைசி காரியமானது, தேவன் தம்முடைய சொந்த வல்லமையிலும், அவருடைய சொந்த நேச குமாரனிலும் வந்து, அவருடைய சபை யின் மூலமாக கிரியை செய்தார். அவர் களோ அதை, 'ஆன்மீகவாதம்' அல்லது 'பிசாசு' என்று சொல்லுகிறார்கள். நியாயத் தீர்ப்பை தவிர வேறு என்ன இன்னும் விடப்பட்டிருக்கிறது? ஓ, இங்கே, சுவற் றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்து இருக்கிறது.

94. ஆனால், அது அவ்வளவு நெருக்கத்தில் இருக்குமானால், எந்த ஒரு போதகருக்கும் தெரியும், உபத்திரவ காலத்திற்கு முன்னர் சபையானது எடுத்துக்கொள்ளப்படுதலில் போகும் என்று. ஆக அவ்வளவு நெருக்கமாயிருக்குமானால், பொழுது விடிவதற்குள் சம்பவிக்க கூடுமானால், எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்து என்ன? அதை காட்டிலும் இது மிக நெருக்கமாக இருக்கிறது. ஓ, கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக! கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. கையெழுத்து எழுதப்பட்டாயிற்று, வேதத்தில் எழுதப்பட்டுள்ளது, அதை காணும்படியாக நாமும் ஜீவித்து கொண்டிருக்கிறோம்.

95. என்னுடைய சத்தத்தின் தூண்டுதலினாலே நீங்கள் இந்த மணி வேளையில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வீர்களா? பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், தூரத்திலிருக்கும் யாவருக்கும் உள்ளது. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை" என்றான். நீ கிறிஸ்துவினுடையவனாய் இராதவரை, நீ ஒரு மெத்தோடிஸ்டாக, பாப்டிஸ்டாக, பெந்தேகொஸ்தேயனாக, நசரேயனாக, கத்தோலிக்கனாகவோ இருக்கலாம். நீ கிறிஸ்துவினுடையவனாய் ஆகும் வரை இழக்கப் பட்டவனாயிருக்கிறாய். கிறிஸ்து உனக்குள்ளாக வருகிறார், அது பரிசுத்தாவியினால் உண்டாகும் புதிய பிறப்பாயிருக்கிறது. நாங்கள் ஜெபிக்கும் போது, இன்றிரவு அவரை பெற்றுக்கொள்ளுங்கள்.

96. உங்கள் தலைகளைத் தாழ்த்துங்கள். இந்த மகாபெரிய சம்பவம் நடக்குமென்று இங்குள்ளவர்களில் எத்தனை பேர் அறிந்துள்ளீர்கள் என எனக்கு வியப்பாயிருக்கிறது. ஒருக்கால் இன்றிரவு உங்கள் மனைவியோடு நீங்கள் படுக்கைக்குப் போகலாம், காலையில் பார்க்கும் போது அவள் போயிருப்பாள். தாயும் தகப்பனுமாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளை முத்தமிட்டு படுக்கைக்குப் போகலாம், காலையில் பார்க்கும் போது அந்த சிறிய படுக்கைகள் காலியாக இருக்கும். திருமதி. ஜோன்ஸ்க்கு என்ன நடந்தது என்பதை அறிய நீங்கள் வீதியில் ஓடலாம், ஆனால், அவளும் கூட எடுத்துக் கொள்ளப்படுதலில் போயிருக்கலாம். எடுத்துக் கொள்ளப்படுதல் சமீபமாயுள்ளது. வேதம் மிகவும் தெளிவாய் கூறியுள்ளது.

97. இந்த கூட்டத்தில் உனக்கு தருணம் கிடைக்கும் போதே புத்தியுள்ள மனிதனைப் போன்று, புத்தியுள்ள மனுஷியைப்

போன்று உங்களுடைய இருதயத்திற்குள் எழும் அந்த அழைப்பிற்கு கவனம் செலுத்தி, “கர்த்தராகிய தேவனே! அந்த நித்திய ஜீவனை என்னிலே நிரப்பும்” என்று நீங்கள் ஏன் சொல்லக் கூடாது? ஏனென்றால், உங்களுடைய ஆவி அறிவுப் பூர்வமான எண்ணங்கொள்ளுமானால், நீ இன்னும் பூமிக்குரியவனாயிருக்கிறாய். ஆனால், பரலோகத்திலிருந்து வெளிவரும் தேவனுடைய ஆவியானது, உன் இருதயத் துக்குள் வந்து, உனக்குள்ளாக பரிசுத்த ஆவியை கொடுக்கின்றது. உபத்திரம் வரும் போது, ஆவியானது, பரிசுத்த ஆவியானது திரும்பவுமாக அதனுடைய சிருஷ்டி கர்த்தாவிடம் போகிறது, நீயும் அதனோடு போகின்றாய். நீ எவ்வளவு தான் பக்தியுள்ளவனாயிருந்தாலும் சரி, உன்னை கொண்டு போகும்படியாய் உள்ளே ஏதோ ஒரு காரியம் இல்லாமல் அது போக முடியாது.

98. இந்த செய்தியின் வாயிலாக எத்தனைப் பேர் தலை வணங்கினவாறு, உங்கள் கரங்களை கிறிஸ்துவுக்கு உயர்த்தி, "தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பும். நீர் வருவீரானால், நான் உம்மோடு போக விரும்புகிறேன்" என்று கூறுவீர்கள்? உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சபை முழுவதும் கரங்கள்! சொல்லப் போனால், இருநூறுக்கும் அதிகமான கரங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

99. பாவியான நண்பனே! நீ கிறிஸ்துவை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதவனானால், இந்த நேரத்தில் உன் கரத்தை உயர்த்தி, “கர்த்தராகிய இயேசுவே, என் மேல் இரக்கமாயிரும்” என்று கூறுவாயா? ஸ்திரீயே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னால் இருக்கிற உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது, “என்னை நினைவு கூறும், கர்த்தாவே...” அங்கே இருக்கிற உம்மை கர்த்தர்

ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களோடிருப் பாராக. "என்னை நினைவு கூறும், கர்த்தாவே! என் கண்கள் இப்பொழுது தான் திறக்கப்பட்டது. அதிக காலமாக நான் என்னை ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன் என்பதை உணருகி றேன். ஆனால், மறுபடியும் பிறப்பது என்பதை ஒருபோதும் அறியாதவனா யிருந்தேன். நான் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளவில்லை".

100. ஆகையால், ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தால் ஒழிய, தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் அல்லது ராஜ்ஜியத்தை காணவும் கூட மாட்டான்.

101. உங்கள் கரங்களை உயர்த்தி, "ஓ, பரிசுத்த ஆவியானவரே! என் மேல் இரக்கமாயிரும். நீர் சபைக்காக வரும் போது, என்னை எடுத்துக்கொள்வீரா?" என்று சொல்வீர்களா? ஸ்திரீயே! தேவன்

உம்மை ஆசீர்வதிப்பாராக. “ஓ, தேவனே! என்னை நினைவு கூறும்” என்று சொல்லும் வேறுயாராவது.. இங்கே, இனிமையான... தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. அங்கே உள்ள ஸ்திரீ, தேவன் உம்மை ஆசீர்வதிப் பாராக. அங்கே, பின்னால் உள்ள ஸ்திரீயே உம்மையும். "ஓ, தேவனே, சுவற்றில் மீது எழுதப்பட்ட கையெழுத்தை நான் பார்க் கும் போது, என் மேல் இரக்கமாயிரும்! வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதை இன்றிரவு நான் கண்டேன் என்று சொல்லக்கூடிய அறிவாற்றல் எனக்கு உண்டு. அதாவது, இது சரித்திரம் மீண்டும் நடைபெறுதலே”.

102. நாம் முடிவு காலத்தில் இருக்கி றோம். உதவி செய்யத்தக்கதாக அங்கே ஒன்றுமில்லை. உலகத்தை அழிக்கக்கூடிய காரியமானது, பாவமான மனிதனின் கரத்தில் இருக்கிறது.

103. இன்னும் கொஞ்சம் தான் உண்டு. கிறிஸ்துவினிடத்தில் வருவதற்காக நியமிக் கப்பட்டவர்களில் நீ ஒருக்கால் கடைசி ஆளாக இருக்கலாம். கடைசியான நபர் வந்ததும், நியாயத்தீர்ப்பு தாக்குகிறது. இன்னமும் ஒரு காரியம் குறைவாயிருக் கிறது, அது ஒருக்கால் நீயாக இருக்கலாம். நாங்கள் காத்திருக்கும் இவ்வேளையிலே இன்றிரவு நீங்கள் அவரை ஏற்றுக்கொள் வீர்களா?

104. இருபது, முப்பது கரங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இங்கு ஜனங்களை முன்னால் கொண்டு வந்து நிறுத்தும் படியாக ஒரு பீட அழைப்பை கொடுக்க நமக்கு இடமில்லை. ஏனென்றால், நமக்கு இடம் ஏதும் இல்லை. ஆனால், நான் உங்களை கேட்கப் போகிறேன், நிச்சய மாக, உத்தமமாயிருந்து எச்சரிப்பின் சத்ததிற்கு செவி கொடுங்கள். உத்தமமா யிருந்து, நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக் கும் இடத்தில் இருந்தே, "கர்த்தாவே,

பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும். நான் கிருபையின் திரைக்கு பின்னால் அதை கடந்து போவதற்கு முன்னர் என்னை ஏற்றுக்கொள்ளும். நான் பாவம் செய்து, என் கிருபையின் நாளை விட்டு தூரமாகும் முன்பு, கர்த்தாவே என் மேல் இரக்கமாயிரும்!" என்று கேளுங்கள். அவர் அதை செய்வார்.

105. ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தாவே! இன்றிரவு நாங்கள் ஒரு பயங்கரமான நிலையில் நின்று கொண்டிருக்கிறோம். நாங்கள் உம்முடைய வார்த்தையை வாசிக் கும் போது, எந்த நேரத்திலும் வானொலி செய்தி திடீரென்று அறிவிக்கப்படலாம், ராக்&ரோல் இசைக்குழு “உம்மண்டை தேவனே” என்ற பாட்டை பாடிக் கொண் டிருக்கலாம். அப்பொழுது மிகவும் காலம் கடந்ததாயிருந்து, நியாயத்தீர்ப்பானது விழுந்து விட்டதாய் இருக்கலாம். ஏவு கணைகள் நம்மை நோக்கி வைக்கப்பட் டிருக்கின்றன. மைல்கள் கணக்கில், மிகவும்

அதிக அளவில், பூமியையே துடைக்கும் அளவுக்கு அணு சக்தியின் அழிவுகள், அது போன்ற காரியம் முழு உலகத்தை தீக்குள்ளாக்கும். அது பாவமான மனிதனின் கரத்தில் இருக்கிறது. அந்த விதமாகத் தான் அது சம்பவிக்கும் என்று வேதம் சொல்லுகிறது. நாம் சுவற்றின் மீது எழுதப்பட்ட கையெழுத்தை காண்கிறோம்.

106. ஓ, தேவனாகிய கர்த்தாவே, இப்படிப்பட்டதான ஒரு செய்தியை இந்த ஜனங்களுக்கு கொண்டு வர நான் போதுமானவனாக இல்லை. இங்கே நின்று கொண்டு, இப்படிப்பட்டதான ஒரு பொருளைக் குறித்து பேச நான் எவ்வளவு சிறியவனாய் இருப்பதாக உணருகிறேன்! ஆனால் அதை சரிவர செய்ய முடியாத என் பங்கிற்காக என்னை மன்னிப்பீரா? ஆனால், எப்படியாயினும் நீர் விரும்புகிற வண்ணமாக இந்த செய்தியை அவர்களுடைய இருதயத்தின் ஆழத்திற்குள் புகுத்த வேண்டுமென்று என் இதய

பூர்வமாக கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வேளையானது நெருங்கி கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன். இரக்கமாயிரும்! தேவனே, ஒவ்வொருவரையும் இரட்சியும், அவர்களை பரிசுத்த ஆவியினால் நிரப்பும். அவர்கள் உம்முடைய பிள்ளைகளாய், உம்முடைய நன்மையினால் தெய்வீகமாய் சுற்றப்பட்டு, கர்த்தராகிய இயேசுவின் பாதுகாப்பைப் பெறுவார்களாக.

107. ஏனென்றால், நம்முடைய தேசம் பாதுகாப்பு அற்றதாய் இருக்கிறது. நாம் என்ன நினைத்தோம், அதே விதமாகத்தான் பாபிலோனிய ராஜ்யம் செய்தது, எல்லா நேரத்திலும் அதையே செய்தது. ஆனால், கிரியை செய்யத்தக்க ஒரு பொல்லாத தேசம் இருந்தது. நம்மை விட முன்னிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று இப்பொழுது நமக்கு தெரிய வரும் வரை, ஒரு பொல்லாத தேசமானது கிரியை

செய்து கொண்டிருந்தது. நாமோ, அவர்களுடைய இரக்கத்தில் இருக்கிறோம்.

108. கர்த்தாவே, சபையானது உம்முடைய இரக்கத்திற்காய் காத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் அழித்துவிடுவார்கள்; ஆனால், நீரோ உம்முடைய சபையை எடுத்துக்கொள்வீர். ஓ, கர்த்தாவே! இன்றிரவு உம்முடைய பாதுகாப்பிற்குள் எங்களை எடுத்துக்கொள்ளும். இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாய் எங்களை ஆசீர்வதியும், இயேசுவின் நாமத்தில் நாங்கள் ஜெபிக்கிறோம், ஆமென்.

109. ஒரு நிமிடம், மென்மையாக, பயபக்தியாக இருங்கள். (பிரன்ஹாம் "Softly and tenderly Jesus is calling" என்ற பாடலை பாடுகிறார்.)

மெதுவாகவும் மென்மையாகவும் இயேசு அழைக்கிறார்.

உனக்கான எனக்கான ஒரு அழைப்பு இப்பொழுது நாம் பாடுகையில், அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்

வாசலில் அவர் காத்துக்கொண்டிருக் கிறார் உனக்கான எனக்கான ஒரு கவனிப்பு வீட்டுக்கு வாருங்கள், எங்கே? மேலே, மேலே உயர வாருங்கள்

சோர்வுற்றவர்கள் வீட்டுக்கு வாருங்கள் ஆர்வத்தோடும் மென்மையோடும் இயேசு அழைக்கிறார் அழைக்கிறார் ஓ, பாவியே வீட்டுக்கு வா

110. ஓ, இப்பொழுது அது சம்பவித் தால் அது என்னே ஒரு அற்புதமான நேரமாய் இருக்கும். ஓ, அது எல்லாம் சரி, எந்த நேரத்திலும் அவர் ஆயத்தமா யிருக்கிறார். ஆமென்! அவரை நான் அறிய மிகவும் ஆவலாயிருக்கிறேன். இங்கே நலிந்து போனதும், தளர்ந்ததுமான இந்த சரீரம் ஒரு நொடிப் பொழுதில் கண்ணிமைக்கும் நேரத்தில் மாறி போகும்


என்பதால் நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன். நான் என்றென்றைக்குமாய் ஜீவிக்கும் படியாக, மீண்டுமாக ஒரு வாலிபனாவேன்.

அங்கே முதியோர் என்றென்றைக்கு மாய் இளமையாயிருப்பார்கள். ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டவர் களாய் அழியாமை உள்ளவர்களாய் அவ ருடைய சாயலில் இருப்போம். நட்சத்திரங் கள் மற்றும் சூரியனை காட்டிலும் அதிகமாய் பிரகாசிப்பார்கள். என்னே ஒரு தருணம்! அவரை தள்ளி போடாதீர்கள். அந்த நித்தியமான நாளில் "ஓ, நன்றாய் செய்தாய் " என்று அவர் சொல்வதைக் கேட்க நீ எவ்வளவாய் வாஞ்சிக்கிறாய்! அருமையான இரட்சகரை உன் இருதயத் திலிருந்து புறம்பே தள்ளாதே, அவரை தள்ளி போடாதே. (அது இரவாய் இருக் கட்டும்).

நாமோ ஃபோர்ட் நாக்ஸ்க்கு சென்று பூமியை ஆழமாகத் தோண்டி நம்முடைய அரசாங்கத்தை அங்கு அமைத்து விடலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஏனென்றால், ருஸ்ஷியா அறு நூறு அடி பூமிக்கு கீழ் சென்று நூற்று ஐம்பது மைல்கள் தூரம் வெடிக்கச் செய்து எரிமலை குழம்பை பீறிடச்செய்யும் அளவிற்குக் அணுகுண்டுகளை வைத்திருக்கிறார்கள்.

இந்த பூமியிலே நீங்கள் எங்கும் பாதுகாப்பாக இருக்க முடியாது. ஒரே ஒரு பாதுகாப்பான இடம் உண்டு. அது இயேசு கிறிஸ்துவின் கரத்தில் மட்டுமே உண்டு. அவரே நமக்கு தஞ்சம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-04-10 காலத்தின் வேதவாக்கிய அடையாளங்கள்

பாருங்கள். அதன் பிறகு “தென்தேசத்து ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடேழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ் சுமத்து வாள். ஏனென்றால் அவள் பூமியின் எல்லைகளிலிருந்து சாலெமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலெமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்.

இப்பொழுது முடிப்பதற்கு முன்பாக இதை சொல்ல விரும்புகிறேன். தேவன் ஒரு வரத்தை இந்த பூமிக்கு அனுப்பும் போது, அதாவது ஒரு அடையாள வரத்தை அனுப்பும் போது, மக்கள் அதை விசுவா சிப்பார்கள் என்றால் அதுவே மக்கள் வாழ்ந்த காலத்திலேயே மகத்தான மகிமை

யுள்ள காலமாய் இருக்கும். ஆனால் அவர் ஒரு அடையாளத்தை அனுப்பி அது புறக்கணிக்கப்படும் என்றால் அந்த சந்ததி பெரும் குழப்பத்திற்குள்ளாகும். அது எப்பொழுதும் அந்த விதமாகத்தான் இருக் கிறது. இன்றிரவு, இந்த கடைசி நாட்களில் அமெரிக்க மக்கள் மட்டும் தேவனுடைய அடையாளத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றால் எப்படி இருக்கும்?

36 **நாமோ ஃபோர்ட் நாக்ஸ்க்கு சென்று பூமியை ஆழமாகத் தோண்டி நம்முடைய அரசாங்கத்தை அங்கு அமைத்து விடலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறோம்.**

**ஏனென்றால், ருஸ்ஷியா அறு நூறு அடி பூமிக்கு கீழ் சென்று நூற்று ஐம்பது மைல்கள் தூரம் வெடிக்கச் செய்து எரிமலை குழம்பை பீறிடச்செய்யும் அளவிற்குக் அணுகுண்டு களை வைத்திருக்கிறார்கள்.**

**இந்த பூமியிலே நீங்கள் எங்கும் பாது காப்பாக இருக்க முடியாது. ஒரே ஒரு பாது காப்பான இடம் உண்டு. அது இயேசு கிறிஸ்துவின் கரத்தில் மட்டுமே உண்டு. அவரே நமக்கு தஞ்சம்.**

**ஆனால் இன்றிரவு, தேவனால் கொடுக்கப்பட்ட வரமாகிய பரிசுத்த ஆவியை அமெரிக்கர்களாகிய நாம் அனைவரும் அதின்மேல் நம்பிக்கை வைத்திருப்போம் என்றால் எப்படி இருக்கும்? ஏன், சால மோனின் நாட்களில் இருந்தது போல, ஒவ்வொரு தேசமும் நம்மை கண்டு பயப்படும்.**

தேவன் சாலமோனுக்கு ஒரு வரத்தை கொடுத்தார். முழு சபையும் எல்லோருமாக அதை விசுவாசித்தார்கள். அது யூதர்க ளுக்கு ஆயிரம் வருட மகிழ்ச்சியின் நாட்களாக இருந்தது. அது வரப்போகிற ஆயிரம் வருட அரசாட்சியின் நாட்களுக்கு நிழலாய் பழைய ஏற்பாட்டில் சாலமோன்

நாட்கள் இருந்தது. அது யூதர்களின் பொற்காலம்.

கவனியுங்கள், யாரும் அவர்களோடு யுத்தம் செய்யவில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தைக் கொண்டிருந்ததினால் அவர்களுடைய தேவன் உண்மையான தேவன் என்று அறிந்து பயந்தார்கள். மற்றும் மக்கள் யாவரும் ஏக மனதாய் ஒருமனப்பாட்டில் இருந்தார்கள். அவர்களுடைய புகழ் எல்லா இடத்திற்கும் சென்றது. எங்கு பார்த்தாலும், “ஓ, இஸ்ரவேலர்கள் எப்பேற்பட்ட மகத்தான தேவனை பெற்றிருக்கிறார்கள், அவர் ஜீவிக்கின்ற தேவன்,” என்று சொல்ல கேட்பீர்கள்.



ஹைட்ரஜன் வெடிகுண்டுகளைக் குறித்தோ அல்லது வேறு எந்த காரியத்தை குறித்து பயப்படாதீர்கள். நீங்கள் உங்களுடைய இதயத்தில் கிறிஸ்துவை பெற்றுக்கொண்டிருக்கும் வரை, எனக்கு தெரிந்தவரை அதுவே மிகச் சிறந்த வெடிகுண்டு பாதுகாப்பிடமாகும்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-0421E — அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்

78 இப்பொழுது, நண்பர்களே, என்னுடைய சொந்த பட்டணம். இந்த எழுப்புதலை முடிப்பதற்கு முன்பாக, நான் இப்பொழுது இதைக் கூற விரும்புகிறேன். இந்நாட்களில் ஒன்றில் ஜெபர்ஸன்வில்லில் ஒரு சாம்பலும் விடப்பட்டிருக்காது, சார் லஸ்டவுனிலும் ஒன்றும் விடப்பட்டிருக் காது, லூயிஸ்வில்லிலும் ஒன்றும் விடப் பட்டிருக்காது. இந்த உலகம் நியாயத் தீர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளது. ரஷ்யா மாஸ்கோவிலிருந்து சுடக்கூடிய ஒரு ஹைட்ரஜன் வெடிகுண்டை இப்பொழுது அவர்கள் வைத்துள்ளனர், நான்காவது தெருவில் தரையிறங்கி, இங்கு சுற்றிலு

முள்ள இந்த வெடிமருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் ஒவ்வொன்றையும், ஒரே வெடிகுண்டினால், பூமிக்கு அடியில் எழுபத்தைந்து அடி ஆழத்தில் புதையச் செய்ய முடியும். ஒரு அணுகுண்டு; பதினைந்து மைல்கள் சதுரத்திற்கு, அது தரையில் நூற்றைம்பது அடி ஆழத்திற்கு செல்லும். அது கைத்துப்பாக்கி விசை யிலும் அவ்வாறுள்ளது. கடிகாரம் ஓடிக் கொண்டேயிருக்கிறது. அது நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாக உள்ளது. ஏன் அந்த நேரம் வரை காத்திருக்க வேண்டும்?

79 நினைவிருக்கட்டும், “இந்த பூமிக் குரிய கூடாரம் அழிந்து போனாலும், நமக்கு ஏற்கனவே ஒன்று காத்திருக்கிறது.” ஹைட்ரஜன் வெடிகுண்டுகளைக் குறித்தோ அல்லது வேறு எந்த காரியத்தை குறித்து

பயப்படாதீர்கள். நீங்கள் உங்களுடைய இதயத்தில் கிறிஸ்துவை பெற்றுக்கொண்டிருக்கும் வரை, எனக்கு தெரிந்தவரை அதுவே மிகச் சிறந்த வெடிகுண்டு பாது காப்பிடமாகும். அது சிறகுகளால் உண்டாக்கப்பட்டது; அவருடைய செட்டைகளின் கீழே நீங்கள் நிலைத்திருக்கிறீர்கள். எனவே நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், இந்த காரியங்களைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

80 ஆனால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராயில்லாமலிருந்தால், நீங்கள் நிச்சயமாகவே ஒரு மோசமான இடத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய இருதயம் எந்த நிமிடத்தில் துடிப்பதை நிறுத்தப் போகிறது என்று உங்களுக்குத் தெரியாது. புருஷர்கள் கடைசி நாட்களில், இருதய கோளாறினால் மரிப்பார்கள் என்று வேதம்

கூறியுள்ளது, “மனுஷருடைய இருதயம் சோர்ந்து போகும், பயமும், தத்தளிப்பான நேரங்களும், ஜனங்களுக்கிடையே இடுக்கணும் உண்டாகும்.” பெண்களைவிட, பத்து மடங்கு ஆண்கள் மரிப்பதை நோக்கிப் பாருங்கள்; பெண்களினுடையை இருதயம் சோர்ந்து போகும் என்று வேதம் ஒருபோதும் கூறவில்லை, அது, “மனுஷருடைய இருதயங்கள் சோர்ந்து போகும்” என்றே உரைத்துள்ளது. அது முற்றிலுமானதாய், பரிபூரணமானதாய் உள்ளது.

81 அன்றொருநாள் ஒக்லாந்தில், நானும் என் மனைவியும் அங்குள்ள சான் பிரான்சிஸ்கோவில், அந்த பெரிய நிலநடுக்க அதிர்வு உண்டானபோது இருந்தோம். கட்டிடங்கள் குலுங்கும் வரை, புகைபோக்கிகள் விழுந்து போகும் வரை, பூமியானது அங்கே அதிரத் துவங்கி,

குலுங்கியது. அந்த இடங்களிலிருந்து புகையோடு, *அந்த* விதமாக பெரிய காற்று பந்துகள்போல அல்லது புகைக்கரி, அது என்னவாக இருந்ததோ, அவை மேலே எழுப்பின. ஜனங்கள் வீதிகளில், கூச்ச லிட்டுக் கொண்டு ஓடினர். அப்பொழுது நான், “உண்மையாகவே கர்த்தர் பிரசன்ன மாகும்போது அது என்னவாயிருக்கும்?” என்று எண்ணினேன். அப்பொழுது விழுந்துபோன மதுபான புட்டிகளைப் பொறுக்கியெடுத்து, திரும்பவும் அலமாரி களில் வைத்து, அதை விற்றனர். அப்பொ ழுது ஜனங்கள் அதை வாங்குவதற்கு வந்தனர். யாரும் அதை வாங்கவில்லை யென்றால் அந்த மனிதனால் அதை விற்க முடியாது. அது உண்மை.

82 அது, நாங்கள் குற்றவாளிகள். சகோதரனே, நான் உங்களுக்கு சொல்லட்

டும். நான் ஒரு அமெரிக்கன், நான் என் தேசத்தை நேசிக்கிறேன். ஆனால் இந்த பண்டைய தேசம் தராசில் நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டது. இன்றிரவு இந்த பிரசங்க பீடத்தின் பின்னே நான் ஒரு ஊழியக்காரனாக இருப்பதுபோல் அவ்வளவு நிச்சயமாக, அவள் மூழ்கிக்கொண்டிருக்கிறாள். இப்பொழுது நான் தேவனிடத்தில் தயையைக் கண்டறியும்படிக்கு அதை நான் கூறிக் கொண்டிருக்கிறேன். அதைக் கூறும்படிக்கு தேவன் அதை என் இருதயத்தில் வைத்தபடியால் நான் அதை கூறிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது மிகச் சிறந்த காரியம் கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப் படுவதேயாகும்.

அவர்களில் யார் முதலாவது வெடிகுண்டைப் போடுவார்களோ என்று பயப்படுகிறார்கள். முதலாவது ஒரு குண்டு போடப்படும். அதைத் தொடர்ந்து எல்லாமே தொடர்ச்சியாக நடக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-11-25E முகம் சிவந்த ஓர் தீர்க்கதரிசி

எங்கிருந்தோ வந்த ஒரு கப்பல் படையை சமீப காலத்தில் அழைத்தார்கள். அது முன்னூறு ஜெட் போர் விமானங் களையும் அவைகளின் அடிபாகத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அணுகுண்டு களையும், ஹைட்ரஜன் வெடி குண்டுகளை யும் உடையதாக இருந்தது.

சமீப நாட்களில், ஷ்ரிவேபோர்டில் இருக்கும் ஒரு பெரிய விமான நிலை யத்தில் பணிபுரிகிற ஒருவன் சகோ. ஜாக்ஸ் அவர்களின் கூட்டத்தில் மனந்திரும்பி னான். அவன் “அந்த அணுகுண்டுகள் எல்லாம் சரியாக அதன் தாங்கிகளில் தொங்கிக்கொண்டிருக்கிறது” என்று சொன்னான்.

“அவைகள் எல்லாம் சரியாக அந்த விமானங்களில் தொங்கிக்கொண்டிருக்கின்றது. மற்றும் அதிலே நாங்கள் தினமும் சென்று பயிற்சி செய்வோம்” என்றான்.

“உனக்கு பயமில்லையா?” என்று கேட்டேன்.

அதற்கு அவன் “அதிலே அந்த விசையிழுப்பு இல்லை, இருப்பினும் நாங்கள் மிகவும் எச்சரிப்போடு இருக்கிறோம், ஏனென்றால் ஒரே ஒரு நிமிடத்தின் இடைவெளியில் அறுபது நொடிகளுக்குள்ளாக விசையிழுப்பை மாட்டி, எரியூட்டி, சடுதியிலே இங்கிலாந்திற்கு அவைகள் பறந்து செல்ல முடியும்” என்றான்.

26. **சமுத்திரம் எங்கிலும் அவர்களுடைய பெரிய குண்டுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. “தைரியம் இருந்தால் ஒரே ஒரு வெடிகுண்டை போட்டுப்பாருங்கள்.**

ஒரே ஒரு அணுகுண்டை ஐக்கிய நாட்டின்மேல் அல்லது ஏதோ ஒரு இடத்தில் போட்டு என்ன நடக்கும் என்று பாருங்கள்;". எப்படி இருக்கும் தெரியுமா? உடனடியாக ரஷ்யாவின் மேலாக தாக்குதல் நடக்கும். அணுகுண்டுகளையும், ஹைட்ரஜன் குண்டுகளையும் போட்டு தாக்கும்போது, உடனடியாக தொடர் தாக்குதல் நடத்தி ஒரு வைக்கோல் குவியல் எரிவதைப் போன்று எரிந்து முழுபூமியையும் எரித்து உருக்கிவிடும்.

இந்த காரியமானது வேதத்தோடு சிறிதும் முரண்பாடாக இல்லை என்று அறிவீர்கள், "பூமியானது வெந்து உருகிப்போம், வானமும் அதினோடு வெந்துபோம்". பூமியின் அணுக்களெல்லாம் அழிந்துபோம். ஒரு அபாயகரமான நாட்களில் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். உலகிலுள்ள மனிதர்களின் பெரிய மனிதர்கள் மரணபயத்தோடு ஜீவிக்கிறதான நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அவர்களில் யார்

**முதலாவது வெடிகுண்டைப் போடுவார்களோ என்று பயப்படுகிறார்கள். முதலாவது ஒரு குண்டு போடப்படும். அதைத் தொடர்ந்து எல்லாமே தொடர்ச்சியாக நடக்கும்.**

27. ஆனால் கிறிஸ்தவனுக்கோ இந்த உலகத்தில் அது மிகுந்த சந்தோஷமான நேரமாக இருக்கவேண்டும். ஏனென்றால் காலம் மாறிப்போகப்போகிறது. வயதானதெல்லாம் வாலிபமாக மாறப்போகிறது. ஓ என்னே! மரணமும் பறந்து ஓடிப்போகப் போகிறது. வியாதி என்பதே இனி இருக்காது. வியாதியஸ்தருக்காக ஜெபக்கூட்டம் இருக்காது. இழக்கப்பட்டவர்களுக்காக ஜெபக்கூட்டம் தேவை இருக்காது. தேவன் பூமியின் நான்கு காற்றின் முனையிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தம்முடைய செட்டைகளுக்குள்ளாகக் கூட்டிச் சேர்ப்பார். அதன் பின் அவருடைய பரத்

திலே, அவரோடு ஜீவித்து என்றென்றைக்கு மாய் ஆட்சி செய்வோம்.

ஓ, சகோதரனே, சகோதரியே என்னுடைய நண்பனே, இன்றிரவு நீ ஆயத்தமாக இல்லாமல் இருப்பாய் என்றால், இந்த நேரத்தில் நீ ஆயத்தமாகுவாயாக. இந்த இரவின் பொழுதில் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படி உனக்கு அழைப்புக் கொடுக்கிறேன். வேறுபட்டிருக்கிறவர்களே, நீங்கள் தேவனோடு இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்று அறிந்திருக்கிறவர்களே என்னோடுகூட இந்த பீடத்தண்டையில் வரும்படிக்கு உங்களுக்கு அழைப்புக் கொடுக்கிறேன். இங்கிருக்கிற ஒவ்வொருவரையும் இங்கே வரும்படி அழைப்புக் கொடுக்கிறேன்.

# அதி பயங்கர சர்மட் ஏவுகணையை நிலைநிறுத்திய ரஷ்யா... பீதியில் NATO நாடுகள்!



## Sep 2, 2023 Tamil News

ஒரே நேரத்தில் 15 அணுகுண்டுகளை சுமந்து செல்லக்கூடிய, மிகவும் ஆபத்தான மற்றும் அதிநவீன அணுசக்தி ஏவுகணையான சர்மாட்டை நிறுத்தி நேட்டோ நாடுகளுக்கு புடின் மிரட்டல் விடுத்துள்ளார்.

---

- **ஒரே நேரத்தில் 15 அணுகுண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட ரஷ்ய ஏவுகணை**
- **ரஷ்யாவின் அறிவிப்பால் நேட்டோ நாடுகளின் பதற்றம் அதிகரித்துள்ளது.**
- **10 டன் எடையுள்ள பல அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியது.**

---

**Last Updated : Sep 2, 2023**, 03:17 PM IST

மாஸ்கோ: உக்ரைன் போர் நடந்து வரும் நிலையில், ரஷ்யா தனது அதிவிரைவு, அதிநவீன அணு ஆயுத ஏவுகணையான சர்மட்டை போர் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ரஷ்ய கையிருப்பில் உள்ள அதிநவீன ஆயுதங்களில் ஒன்றாகும்.

**இந்த ரஷ்ய ஏவுகணை அமெரிக்கா வரை சென்று அணுகுண்டை போட்டு தாக்கும் திறன் கொண்டது.**

**இந்த ஏவுகணை திறன் குறித்து ஒரு முறை கூறிய அதிபர் விளாடிமிர் புடின், சர்மட் ஏவுகணை ரஷ்யாவின் எதிரிகளை ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வைக்கும் என கூறியிருந்தார்.**

சர்மாட் ஏவுகணை போர் பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் விண்வெளி ஏஜென்சியின் தலைவர் யூரி போரிசோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் இந்த அறிவிப்பால் நேட்டோ நாடுகளின் பதற்றம் அதிகரித்துள்ளது.

சர்மட் மூலோபாய அமைப்பு போர் எச்சரிக்கை நிலையில் உள்ளது என்று யூரி கூறினார்.

RS–28 சர்மட் ஏவுகணை ஒவ்வொன்றும் 10 டன் எடையுள்ள பல அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியது என்று நிபுணர்கள் கூறியதாக ரஷ்ய செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்துள்ளது.

**இந்த ஏவுகணை உலகின் எந்த மூலை யையும் தாக்கும் திறன் கொண்டது.**

முன்னதாக, அமெரிக்க அதிபர் அலுவலக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி வெள்ளிக்கிழமை கூறுகையில், ரஷ்யா சர்மாட் ஏவுகணையை போர் பணியில் நிலைநிறுத்தி யதா என்பதை இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை என கூறப்பட்டுள்ளது.


ரஷ்பா
1
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து